# රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
# பதிவாளர் நாயகம் திணைக்களம்
# REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. RG/NB/01/சுற்றறிக்கை

ප්‍රධාන කාර්යාලය / தலைமை அலுவலகம் / HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. 565

ඔබේ අංකය / உமது இல. / Your No.

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date 2022.01.03


உள்ளக சுற்றறிக்கை : 01/2022

சகல காணி பதிவாளர்களுக்கும்,

**குத்தகை உறுதி மற்றும் ஈட்டுமுறிக்கான முத்திரைத் தீர்வையைச் செலுத்துதல்.**

1982 ஆம் ஆண்டின் 43ம் இலக்க முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 22ம் பிரிவிற்கு மற்றும் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 31 (6), (7) ம் பிரிவுகளுக்கு அமைய நொத்தாரிசு ஒருவரினால் தயாரித்து சான்றுப்படுத்தப்படும் ஆவணங்களுக்காக உரிய முத்திரைத் தீர்வை செலுத்தப்படுதல் வேண்டும். முத்திரைத் தீர்வைக்குட்பட்ட ஆவணமொன்றிற்கு உரிய முறையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வில்லையாயின் அவ்வாறான ஆவணங்களை பதிவுசெய்வதை காணிப் பதிவாளர் நிராகரித்தல் வேண்டுமென ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 36(2) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02. ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை செலுத்துதல் சம்பந்தமாக சட்ட ரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் சில நொத்தாரிசுகள், தங்களால் தயாரித்து சான்றுப்படுத்தப்படும் ஆவணங்களுக்காக உரிய முறையில் இரண்டாவது பிரதிக்கான முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதில்லையென எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. இது அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய வருமான இழப்பாகுமென்பதோடு பொதுமக்களுக்கு குறித்த ஆவணங்களின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கும் போது எமது திணைக்களத்திற்கு சிக்கலையும் ஏற்படுத்தியுள்ளது.

03. இவ்வாறான நிலையேற்படுவதைக் குறைத்துக் கொள்வதற்காக இதற்கு முன்னர் 03/2021 ம் இலக்க சுற்றறிக்கை என்னால் வெளியிடப்பட்டது. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு வரவு வைக்கும் வகையில் சட்டரீதியான ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் இரண்டாவது பிரதிக்கான முத்திரைத் தீர்வையை செலுத்திய பிரதியின் நகல் பிரதியையோ அல்லது குறித்த நொத்தாரிசினால் உண்மையான பிரதியென சான்றுப்படுத்தப்பட்ட குறித்த பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதியொன்றையோ ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக முன்வைக்கும் போது அசல் பிரதியுடன் இணைத்துப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென அறிவிக்கின்றேன்.

04. உரிய முத்திரைத் தீர்வைக்கான இரண்டாவது பிரதியில் முத்திரை ஒப்படப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில், குறித்த இரண்டாவது பிரதியின் நகல் பிரதியொன்றை நொத்தாசியினால் உண்மையான பிரதியென சான்றுப்படுத்தி அதனை அசல் பிரதியுடன் இணைத்து பதிவு செய்வதற்காக முன்வைத்தல் வேண்டும்.


දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. 2889488, 2889489

ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. 2889491

වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website www.rgd.gov.lk

විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail rgd@sltnet.lk, rg@rgd.gov.lk

05. குறித்த தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாத ஆவணங்கள் தொடர்பாக ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 36(2) ம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கையெடுக்குமாறு மேலும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

**டப்ளிவ்.எம்.எம்.பி. வீரசேகர**
பதிவாளர் நாயகம்

பிரதி : 01. மேலதிக பதிவாளர் நாயகம் -
02. பிரதான உள்ளக கணக்காய்வாளர்
03. சகல வலயப் பொறுப்பு பிரதி/உதவி பதிவாளர் நாயகங்களுக்கும் -
04. சகல மாவட்டப் பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்களுக்கும் -
05. பிரதான அலுவலகத்தின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள் -

(01–05) தயவுடன் அறிந்து கொள்வதற்கு மற்றும் உரிய நடவடிக்கையெடுப்பதற்காக

06. செயலாளர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் - அங்கத்தவர்களுக்கு அறிவிப்பதற்கா